# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1990 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, குறித்துரைக்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்கள் (வரி, மற்றும் சலுகைகள்) சட்டம்

---

*[1990, திசெம்பர் மாதம் 06 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1990, திசெம்பர் மாதம் 07 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சகத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 90 தபாற் செலவு : ரூபா [illegible]

## 1990 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, குறித்துரைக்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்கள் (வரி, மற்றும் சலுகைகள்) சட்டம்

[1990, திசெம்பர் மாதம் 06 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 44/90

**குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வைப்புச் சான்றிதழைத் தனதுடைமையில் வைத்திருக்கும் எவரேனும் ஆளுக்கு வரிச் சலுகைகளுக்காக ஏற்பாடுசெய்வதற்கும்; அத்தகைய சான்றிதழ்கள் எப்பணங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டனவோ, அவரது இயைபான இலாபங்களை அல்லது வருமானத்தைக் குறித்துக்காட்டும் அப்பணங்களைத் தேசிய சேமிப்பு வங்கியில் விசேட கணக்குகளில் வைப்பிலிடுவதனை இயலச்செய்வதற்கும்; அத்தகைய விசேட கணக்குகளில் வைப்பிலிடப்பட்ட பணங்களின்மீது ஒரு வரியை விதித்து அறவிடுவதற்கும்; அத்தகைய விசேட கணக்குகளில் பணங்களை வைப்பிலிடும் ஆட்களுக்கு அத்தகைய இலாபங்கள் அல்லது வருமானம் தொடர்பான தவறுகைகளுக்கான குற்றவழக்குகளுக்கெதிராக நட்டோத்தரவாதமளிப்பதற்கும்; அவற்றோடு சம்பந்தப்பட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1990 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, குறித்துரைக்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்கள் (வரி, மற்றும் சலுகைகள்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். **சுருக்கப் பெயர்.**

2. (1) குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வைப்புச் சான்றிதழைத் தனதுடைமையில் வைத்திருக்கின்றவரும்— **இச்சட்டம் ஏற்புடையதாகும் ஆட்கள்.**

(அ) அவரது இயைபான இலாபத்தின் அல்லது வருமானத்தின் முழுமையை அல்லது அதன் ஏதேனும் பாகத்தைக் குறித்துக்காட்டுகின்ற பணங்களிலிருந்து அத்தகைய வைப்புச் சான்றிதழைக் கொள்வனவு செய்துள்ளாரென உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது வேறெவரேனும் அலுவலரினால் கண்டுபிடிக்கப்படுகின்றவரும்;

(ஆ) 1989 மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் எழுந்த அல்லது அவருக்குத் திரண்ட இலாபங்கள் அல்லது வருமானம் அல்லது மொத்த விற்பனை வரவு தொடர்பில், வருமானவரியை அல்லது வருமானவரியின்மீதான மிகைவிறப்பனவை விதித்தலுக்கு அப்போதைக்கு ஏற்புடையதான சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வரியை, அல்லது 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தொழில் மொத்தவரவுவரியை, அல்லது 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவுவரிச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் மொத்தவிற்பனை வரவுவரியைத் தட்டிக்கழித்துள்ளாரென்ற ஏதேனும் சார்த்துகைக்காக அல்லது சந்தேகிப்புக்காக உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது எவரேனும் அலுவல

ரினால் அவர் தொடர்பான ஏதேனும் நுண்ணாய்வு தொடங்கு முன்னர், தாம் அத்தகைய வைப்புச் சான்றிதழ்களை அவரது இயைபான இலாபங்களினதும் வருமானத்தினதும் முழுமையை அல்லது அதன் பாகத்தைக் குறிக்கின்ற பணங்களினின்றும் அவற்றிலிருந்தும் கொள்வனவு செய்துள்ளாரென உண்ணாட்டர சிறைத் திணைக்களத்தின் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது எவரேனும் அலுவலருக்குத் தன்னிச்சையாகவே வெளிவிட்டுள்ளவரும்,

ஆன எவரேனுமாளுக்கு இச்சட்டம் ஏற்புடையதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஒவ்வோராளும், இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் "இச்சட்டம் ஏற்புடையதாகும் ஆள்" என்று குறிப்பீடுசெய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அவ்வுட்பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு வைப்புச் சான்றிதழும், இதனகத்துப்பின்னர் இச்சட்டத்தில் "இச்சட்டம் ஏற்புடையதாகும் குறித்துரைக்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்" என்று குறிப்பீடுசெய்யப்படுதலும் வேண்டும்.

**இச்சட்டம் ஏற்புடையதாகும் ஆட்கள் வங்கியில் விசேட கணக்குகளில் பணத்தை வைப்பிலிடலாம்.**

3. (1) இச்சட்டம் ஏற்புடையதாகும் எவரேனுமாள், இச்சட்டம் ஏற்புடையதாகும் ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட வைப்புச் சான்றிதழை வங்கிக்கு விற்கலாம் என்பதுடன், அத்தகைய விற்பனையாலான முழு வரும்படிகளையும் வங்கியில் அந்நோக்கத்துக்காக அவரினால் திறக்கப்படக்கூடிய அத்தகைய ஏதேனும் விசேட கணக்கில் அவரது வரவுக்கு வைப்பிலிடலாம்.

(2) இச்சட்டம் ஏற்புடையதாகும் ஆள் எவரினாலும் விற்பனைக்கென வங்கிக்கு முனையப்பட்ட இச்சட்டம் ஏற்புடையதாகும் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வைப்புச் சான்றிதழை, அத்தகைய வைப்புச் சான்றிதழ் இச்சட்டம் ஏற்புடையதாகும் வைப்புச் சான்றிதழ் என ஆணையாளர் தலைமையதிபதி வங்கிக்கு அத்தாட்சிப்படுத்தினால், வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய விலையில் கொள்வனவுசெய்தல் வங்கிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

**வங்கியில் விசேட கணக்கொன்றில் வைப்பிலிடப்பட்ட தொகையின் பத்து சதவீதத்துக்குச் சமமான வரியொன்றை இறுத்தல்.**

4. (1) மூன்றாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏதேனும் வைப்பை இடும் ஒவ்வோராளும்—

(அ) இச்சட்டத்துக்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்தில் வங்கிக்கு ஒரு வெளிப்படுத்துதலைச் செய்தல்வேண்டும்; அத்துடன்

(ஆ) 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க வங்கிக்கு விற்கப்பட்டதும், இச்சட்டம் ஏற்புடையதாகின்றதுமான குறித்துரைக்கப்பட்ட வைப்புச் சான்றிதழின் முகப் பெறுமதியின் பத்துசத வீதத்துக்குச் சமமான தொகையொன்றிலான வரியொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்துவதற்கு ஆளாதல் வேண்டும்; அத்துடன்

(இ) (ஆ) என்னும் பந்தியின்கீழ் செலுத்தப்படற்பாலதான வரியிலிருந்து, அந்தக் குறித்துரைக்கப்பட்ட வைப்புச் சான்றிதழ் தொடர்பாக 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத்

தீர்வைச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அவரினால் செலுத்தப்பட்ட ஏதேனும் முத்திரைத் தீர்வையின் தொகையைக் கழிப்பதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் கழிக்கத்தக்க ஏதேனும் தொகையைக் கழித்தபின்னர் அவ்வுட்பிரிவின்கீழ் எவரேனுமாலினால் செலுத்தப்படற்பாலதான வரியானது, வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எப்படியிருப்பினும், அத்தகைய ஆளினால் 3 ஆம் பிரிவிற் குறிப்பிடுசெய்யப்பட்ட விசேட கணக்கு எத்தேதியன்று திறக்கப்படுகின்றதோ அத்தேதியிலிருந்து பதினான்கு நாட்களினுள், அக்கணக்கில் அவரது வரவிலிருக்கும் பணங்களிலிருந்து வங்கியினால் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(3) மூன்றாம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்படுகின்றவாறான அத்தகைய விசேட கணக்கில் எவரேனுமாளின் வரவிலிருக்கும் பணங்களிலிருந்து (2) ஆம் உட்பிரிவின்கீழ் வங்கியினால் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செய்யப்படும் வரிக்கொடுப்பனவு அத்தகைய ஆளினால் அதிகாரமளிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வரி அத்தகைய ஆளினால் ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செலுத்தப்பட்டிருப்பதாகக் கருதப்படுதலும் வேண்டும்.

**விசேட கணக்குகளில் வைப்பிலிடப்பட்ட பணங்களை மீளப்பெறுதல் மீதான மட்டுப்பாடு.**

5. வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் எது எப்படியிருப்பினும், 3 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்படுகின்றவாறான அத்தகைய ஏதேனும் விசேட கணக்கில் எவையேனும் பணங்களை வைப்பிலிட்டுள்ள எவரேனுமாளை, அத்தகைய ஆளினால் அத்தகைய விசேட கணக்கு எத்தேதியன்று திறக்கப்படுகிறதோ அத்தேதியிலிருந்து கணக்கிடப்பட்ட இரண்டாண்டுக் காலப்பகுதி முடிவுறுமுன்னர், 4 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்பட்ட வரிக்கொடுப்பனவின் பின்னர் அத்தகைய விசேட கணக்கில் அவரது வரவிலிருக்கும் மீதித்தொகை முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தை மீளப்பெறுவதற்கு அனுமதித்தலாகாது :

ஆயின், அத்தகைய ஆள்—

(அ) வங்கியினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கமைய, மேற்சொல்லப்பட்ட இரண்டாண்டுக் காலப்பகுதி முடிவுறுமுன்னர், அத்தகைய மீதித்தொகையின் மேல் திரளுகின்ற வட்டி முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தை மீளப் பெறுவதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) வங்கிக்கு முகவரியிடப்பட்ட எழுத்திலான கடிதத் தொடர்பின் மூலம், அத்தகைய மீதி முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தை, 1989 மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடையும் ஏதேனும் காலப்பகுதிக்காக, ஆணையாளர் தலைமையதிபதியினால் விதிக்கப்பட்ட ஏதேனும் வரியையும் அதன்மீதான ஏதேனும் தண்டத்தையும் கொடுத்துத்தீர்ப்பதற்கு ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பும்படி வங்கியை வேண்டலாம்.

*விசேட கணக்குகளில் வைப்பிலிடப்பட்ட பணங்களின் மீதான வட்டி.*

6. மூன்றும் பிரிவிற் குறிப்பிடுசெய்யப்படுகின்றவாறான அத்தகைய ஏதேனும் விசேட கணக்கில் எவரேனுமாளின் வரவிலிருக்கின்ற மீதித் தொகையின்மேல், 4 ஆம் பிரிவிற் குறிப்பிடுசெய்யப்பட்ட வரிக்கொடுப்பனவைச் செய்தபின்னர், சேமிப்புக் கணக்குகளின் வரவிலிருக்கும் பணங்களின்மீது வங்கியினால் செலுத்தப்படற்பாலதான நடப்பு வட்டிவீதத்தில் வங்கியானது வட்டிசெலுத்துதல் வேண்டும்.

*விசேட கணக்குகளில் வைப்பிலிடப்பட்ட பணங்களின் மீதான வட்டிக்கு வருமான வரியிலிருந்து விலக்களித்தல்.*

7. வேறேதேனும் எழுத்திலான சட்டத்தில் முரணுகை எது எவ்வாறிருப்பினும், 3 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்படுகின்றவாறான அத்தகைய ஏதேனும் விசேட கணக்கில் வைப்பிலிடப்பட்ட பணங்களின்மீதானதும் 5 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்படுகின்றவாறான இரண்டாண்டுக் காலப் பகுதி யின்போது திரளுகின்றதுமான வட்டி, வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

*4 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட வரியைச் செலுத்தியவராகக் கருதப்பட்ட ஆளொருவருக்குக் குறித்த சில வரிகளிலிருந்தும் குற்றவழக்குகளிலிருந்தும் நட்டோத்தரவாதமளித்தல்.*

8. இச்சட்டம் ஏற்புடையதாகின்றவரும் 4 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட வரியைச் செலுத்தியவராகக் கருதப்படுகின்றவருமான எவரேனும் ஆள் பின்வருவனவற்றுக்கு ஆளாதலாகாது :—

(அ) (i) 1989 மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைந்த ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு 3 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய ஏதேனும் விசேட கணக்கில் அவரால் வைப்பிலிடப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வைப்புச்சான்றிதழ்களின் விற்பனையினாலான வரும்படிகளினால் குறிக்கப்படுகின்றவாறான அவரது இயைபான இலாபங்களின் அல்லது வருமானத்தின் அத்தகைய பாகம் தொடர்பில், வருமானவரி அல்லது வருமான வரியின் மீதான மிகைவிறுப்பனவு விதித்தலுக்கு அப்போதைக்கு ஏற்புடையதாகும் சட்டத்தின்கீழ் ஏதேனும் வருமானவரி அல்லது வருமானவரியின்மீதான மிகைவிறுப்பனவு ; அல்லது

(ii) 1989 மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைந்த ஏதேனும் வரிமதிப்பீட்டாண்டுக்கு. அவரது தேறிய செல்வத்தின் எந்தப் பாகத்தைக் கொள்ளுவதற்கு 3 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய ஏதேனும் விசேட கணக்கில் அவரினால் வைப்பிலிடப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்களின் விற்பனையினாலான வரும்படிகளினால் குறிக்கப்படுகின்றவாறான அவரது இயைபான இலாபங்களின் அல்லது வருமானத்தின் அத்தகைய பாகம் பயன்படுத்தப்பட்டுள்ளதோ, அவரது தேறிய செல்வத்தின் அந்தப் பாகம் தொடர்பில், செல்வவரி அல்லது செல்வவரியின் மீதான மிகைவிறுப்பனவின் விதித்தலுக்கு அப்போதைக்கு ஏற்புடைத்தாகும் சட்டத்தின்கீழ் ஏதேனும் செல்வவரி அல்லது செல்வவரியின் மீதான மிகைவிறுப்பனவு ; அல்லது

(iii) 1989 மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைந்த ஏதேனும் காலாண்டுக்கு, 3 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்படுகின்றவாறன அத்தகைய ஏதேனும் விசேட கணக்கில் அவரினல் வைப்பிலிடப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்களின் விற்பனையிலான வரும்படிகளினுல் குறிக்கப்படுகின்றவாறன அவரது இயைபான இலாபங்களினது அல்லது வருமானத்தினது அத்தகைய பாகம் மொத்த வரவின் எந்தப் பாகத்திலிருந்து எழுந்ததோ அல்லது பெறப்பட்டதோ அந்தப் பாகம் தொடர்பில், 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின்கீழான ஏதேனும் தொழில் மொத்த விற்பனை வரவு வரி அல்லது 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின்கீழான ஏதேனும் மொத்த விற்பனை வரவு வரி; அல்லது

(ஆ) பின்வருவனவற்றின் கீழான ஏதேனும் தவறுக்கான ஒரு குற்ற வழக்குக்கு அல்லது ஒரு தண்டத்துக்கு :—

(i) பந்தி (அ) (i) இல் குறிப்பீடு செய்யப்பட்ட அவரது இயைபான இலாபங்களினதும் வருமானத்தினதும் அத்தகைய பாகம் தொடர்பில் அல்லது இவை சம்பந்தமாக அல்லது பந்தி (அ) (ii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட அவரது தேறிய செல்வத்தின் அத்தகைய பாகம் தொடர்பில் அல்லது அது சம்பந்தமாக 1989 மார்ச்சு 31 ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் முடிவடைந்த எந்த வரிமதிப்பீட்டாண்டு தொடர்பாகவும் வருமானவரியின் அல்லது வருமானவரி மிகையிறுப்பனவின், அல்லது செல்வ வரியின் அல்லது செல்வவரி மிகையிறுப்பனவின் விதித்தலுக்கு அப்போதைக்கு ஏற்புடையதாகும் சட்டம்: அல்லது

(ii) பந்தி (அ) (iii) இல் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த வரவின் அத்தகைய பாகம் தொடர்பில், 1989 மார்ச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் முடிவடைந்த ஏதேனும் காலாண்டு தொடர்பாக 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம் அல்லது 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டம்.

9. இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ள எதுவும்,— *இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகள் முன்னர் செய்யப்பட்ட ஏதேனும் வரி மதிப்பீட்டை மீளாய்வதற்கு அதிகாரமளிப்பனவாகப் பொருள் கொள்ளப்படலாகாது.*

(அ) (i) வருமானவரி அல்லது வருமானவரியின் மிகையிறுப்பனவு அல்லது செல்வவரி அல்லது செல்வவரியின் மிகையிறுப்பனவு விதித்தல் தொடர்பாக அப்போதைக்குள்ள சட்டத்தினதும்; அல்லது

(ii) 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டத்தினதும் அல்லது 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவுவரிச் சட்டத்தினதும்,

ஏற்பாடுகளின்கீழ் செய்யப்பட்ட ஏதேனும் வரிமதிப்பீட்டின் அல்லது

(ஆ) வேறேதேனும் கருமத்தினதும்,

மீளாய்வை அதிகாரமளிப்பதாக (இது அத்தகைய ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் இறுதியானதும் முடிவானதுமாக வந்திருத்தல் வேண்டும்) வாசிக்கப்படுதலோ பொருள்கொள்ளப்படுதலோ ஆகாது.

**இரகசியத்தைப் பேணுதல்.**

**10.** (1) உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் அல்லது வங்கியின் ஒவ்வோர் அலுவலரும் அல்லது ஊழியரும், இச்சட்டத்தைச் செயற்படுத்துகையில் அவரது அறிவுக்கெட்டக்கூடிய எல்லாக் கருமங்களும்பற்றி இரகசியத்தைப் பேணிக்காத்தலும் இரகசியத்தைப் பேணிக்காப்பதில் உதவுதலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் ஆணையாளர் தலைமையதிபதியுடன் அல்லது எவரேனும் அலுவலருடன் அல்லது ஒரு சட்ட நீதிமன்றத்துடன், இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகும் நோக்கத்துக்காக, 3 ஆம் பிரிவிற் குறிப்பீடுசெய்யப்படுகின்றவாறான அத்தகைய ஏதேனும் விசேட கணக்குத் தொடர்பான பின்வரும் விபரங்கள்பற்றிக் கடிதத்தொடர்பு கொள்ளலாம் :—

(அ) கணக்குவைத்திருப்பவரின் பெயரும் வருமானவரிக் கோப்பிலக்கமும்;

(ஆ) தொழில் ஏதேனுமிருப்பின் அதன் பெயரும், வருமானவரிக் கோப்பிலக்கமும்;

(இ) வைப்பு அல்லது மீளப்பெறுகைத் தேதி;

(ஈ) வைப்பிலிடப்பட்ட அல்லது மீளப்பெறப்பட்ட தொகை ;

(உ) அத்தகைய விசேட கணக்குத் தொடர்பாக பிரிவு 4(1)(அ) வின் கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துதலில் குறிப்பீடுசெய்யப்படுகின்றவாறான அத்தகைய வேறு விபரங்கள்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயலாற்றுகின்ற உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தின் அல்லது வங்கியின் எவரேனும் அலுவலர் அல்லது ஊழியர் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐயாயிரம் ரூபாவை விஞ்சாதவொரு குற்றப்பணத்துக்கு ஆளாதலும் வேண்டும்.

**பொருள்கோடல்.**

11. இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய—

"வங்கி என்பது 1971 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தேசிய சேமிப்பு வங்கிச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கி என்று பொருளாகும் ;

"ஆணையாளர் தலைமையதிபதி", "இலாபங்கள்", "வருமானம்", "செல்வம்", "வரிமதிப்பீட்டாண்டு" என்ற சொல்லமைப்புகள், முறையே 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க உண்ணாட்டா

சிறைச் சட்டத்திலுள்ள அதே பொருள்களைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"ஆள்" என்பது ஒரு கம்பெனியையும் ஆட்கள் குழுவையும் உள்ளடக்குகின்றது.

எவரேனுமாள் தொடர்பாக "இயைபான இலாபங்கள் அல்லது வருமானம்" என்பது, பின்வரும் எவையேனும் இலாபங்கள் அல்லது வருமானம் என்று பொருளாகும் :—

(அ) 1989 மார்ச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் அவரினால் பெறப்பட்டவை அல்லது அவரது நன்மைக்கு எழுந்தவை அல்லது திரண்டவை ; அத்துடன்

(ஆ) வருமான வரி விதித்தலுக்கு அப்போதைக்கு ஏற்புடையதாகவுள்ள சட்டத்தின்கீழ் அவை தொடர்பில் விபரத்திரட்டெதுவும் அவரினால் கொடுத்துதவப்படாதவை, அல்லது அவரினால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டில் வெளிவிடப்பட்டிராதவை ; அத்துடன்

(இ) வருமானவரி அல்லது வருமானவரியின் மீதான மிகையிறுப்பனவு விதித்தலுக்கு அப்போதைக்கு ஏற்புடையதாகவுள்ள சட்டத்தின்கீழ் வருமான வரி அல்லது வருமானவரியின் மீதான மிகையிறுப்பனவு இறுக்கப்படற்பாலதாகவிருந்தவை ;

"குறித்துரைக்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்" என்பது—

(அ) 1989 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க திறைசேரி வைப்புச் சான்றிதழ்கள் சட்டத்தின்கீழ் ; அத்துடன்

(ஆ) 1990 யூன் 20 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் ஆனால் 1991 சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர்

வழங்கப்பட்ட ஏதேனும் வைப்புச் சான்றிதழ் என்று பொருளாகும் ;

"வருமானவரி அல்லது வருமானவரியின்மீதான மிகையிறுப்பனவு விதித்தலுக்கு அப்போதைக்கு ஏற்புடையதாகவுள்ள சட்டம்" என்பது, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம், 1982 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, செல்வவரியின் மீதான மிகையிறுப்பனவுச் சட்டம், அத்துடன் 1989 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, செல்வவரியின்மீதான மிகையிறுப்பனவுச் சட்டம் என்று பொருளாகும்.

12. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல் வேண்டும்.*

(பிரிவு 4 (1) (அ))

## அட்டவணை

1900 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, குறித்துரைக்கப்பட்ட வைப்புச்
சான்றிதழ்கள் (வரி, மற்றும் சலுகைகள்) சட்டம்
பிரிவு 4(1) (அ) வின் கீழான வெளிப்படுத்தல்

வருமானவரிக் கோப்பிலக்கம் :

(ஏதேனுமிருப்பின்)........................

விசேட கணக்கு இல :..................

தொழிலின் பெயர் ஏதேனுமிருப்பின் :..................

தேதி :....................

..........................................................................................................

(முகவரி)

என்ற முகவரியைச் சேர்ந்த திரு./திருமதி/செல்வி.......................... (முழுப் பெயர்) ஆகிய நான்/நாங்கள் .................. இத்தால்

(1) உங்களை வேண்டுகின்றேன்/வேண்டுகிறோம்—

(அ)... ......... இன் நியதிகளின்படி............ரூபா கொண்ட ஒரு பணத் தொகையை (ரூபா ............) ............ முகவரியைச் சேர்ந்த ............ என்பவரின் பெயரில் ஒரு விசேட கணக்கில் இட்டுவைப்பதற்கு ஏற்றுக் கொள்ளும்படி.

(ஆ)) ........... ரூபா தொகையினதான (ரூபா............) இத்தொகையின் மீது வருமதியாகவுள்ள வரியை உண்ணாட்டரசிறை ஆணையாளருக்கு நேரடியாக அனுப்பும்படி,

(இ) அக்கணக்கிலுள்ள மீதித்தொகை ............ உடன் வைத்திருக்கும்படி, அளிக்கப்பட்ட தொகை ரூபா.........ரூபா.........வரிகழித்தகு 20 சத விதத்தைக் கழிக்க ரூபா ............ செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வையைக் கழிக்க ரூபா ............ ரூபா ............
தேசிய சேமிப்பு வங்கியினால் விசேட கணக்கில் வைத்திருக்கப்பட வேண்டிய மீதித்தொகை ரூபா.........ரூபா.........

(2) இத்தேதியிலிருந்து இரண்டாண்டுகள் முடிவுறுமுன்ன இந்த மீதித் தொகையின் எப் பாகத்தையும் மீளப்பெறமாட்டேன்/மீளப்பெறமாட்டோம் எனப் பொறுப்பேற்கிறேன்/பொறுப்பேற்கிறோம் ;

(3) எனது/எங்கள் விசேட பணவைப்புப் புத்தகம் உங்கள் வங்கியினது காப்பான கட்டுக்காப்பில் வைத்திருக்கப்படுவதற்கு உடன்படுகிறேன்/உடன்படுகிறோம் ;

(4) அப்போதைக்குள்ளனவும், காலத்துக்குக் காலம் பயனுடையனவாக வரக்கூடியனவுமான உங்கள் வங்கியிலுள்ள சேமிப்பு வைப்புக்கள் பற்றிய விதிகளினால் பிணிக்கப்படுவதற்கு மேலும் உடன்படுகின்றேன்/உடன்படுகிறோம் ;

(5) அப்பயன்பட்ட வேண்டுகோளொன்று என்னால்/எங்களால் எழுத்தில் உங்களுக்குச் செய்யப்படுவதன்மேல் இந்த மீதித் தொகை முழுவதையும் அல்லது அதன் ஏதேனும் பாகத்தை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அனுப்பும்படி இத்தால் அதிகாரமளிக்கிறேன்/அதிகாரமளிக்கிறோம்.

வைப்பிலிடுபவரின் ஒப்பம்.

எனது முன்னிலையில் ஒப்பமிடப்பட்டது.

கிளை முகாமையாளரின் ஒப்பம்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.